தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 3-3-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பீட்ரூட் விலை சீராக இருக்கும்

பீட்ரூட் பொதுவாக வட அமெரிக்கா, மத்திய அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய பகுதிகளில் பரவலாக பயிரிடப்படுகிறது. பீட்ரூட்டில் அதிக அளவு கார்போஹைட்ரேட், புரதம், கனிமங்கள் மற்றும் நுண்ணூட்டசத்துக்கள் அதிக அளவில் உள்ளது.

இந்தியாவில் அரியானா, உத்திரப்பிரதேசம், இமாச்சல் பிரதேசம், மேற்கு வங்காளம் மற்றும் மகாராஷ்டிரா ஆகியன பீட்ரூட் பயிரிடப்படும் முக்கிய மாநிலங்களாகும். தமிழ்நாட்டில் 2011-12ம் ஆண்டில் பீட்ரூட் 1,116 எக்டரில் பயிரிடப்பட்டது. திருப்பூர், தேனி, நீலகிரி, திண்டுக்கல், கோவை, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகியன பீட்ரூட் பயிரிடப்படும் முக்கிய மாவட்டங்களாகும். தமிழகத்தில் ஜுலை – ஆகஸ்டு மற்றும் பிப்ரவரி- மார்ச் மாதத்தில் பயிரிடப்பட்டு. மே-ஜுலை மற்றும் நவம்பர்- டிசம்பர் மாதங்களில் அறுவடை செய்யப்படுகிறது.

விவசாயிகள் இந்த ஆண்டு விதைப்பு பற்றிய சரியான முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில், வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனை தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம் மேட்டுப்பாளையம் சந்தையில் கடந்த 8 வருடங்களாக நிலவிய விலைகளை ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில் அறுவடையின் போது அதாவது மே மற்றும் ஜுன் 2014ல் மலைப்பகுதியில் விளைந்த பீட்ரூட் பண்ணை விலையாக கிலோ ஒன்றுக்கு ரூ.11-13 வரை என்ற நிலையைப் பெறும். சமவெளி பகுதியில் பயிரிடப்பட்ட பீட்ரூட்டிற்கு கிலோ ஒன்றுக்கு ரூ.1-2 பண்ணை விலை குறைவாக

கிடைக்கும். இந்த விலை நிலவரங்களைக் கருத்தில் கொண்டு விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு விவசாயிகள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405

மக்கள் தொடர்பு அலுவலர்